[பேரவைத் தலைவர்] [2003 மார்ச் 26

(ஆ) ஈராக் மீது போர் தொடுத்துள்ள அமெரிக்காவிற்குக் கண்டனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஈராக் மீது போரைத் தொடுத்துள்ள அமெரிக்காவிற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்:

"ஈராக் மீது அமெரிக்கா தற்போது நடத்தி வருகின்ற போருக்குப் பெரும்பான்மையான உலக நாடுகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனையையும் மீறி, அமெரிக்கா ஈராக் நாட்டின் மீது நியாயமற்ற முறையில் போர் தொடுத்துள்ளதற்குத் தமிழக சட்டமன்றப் பேரவை தனது வருத்தத்தையும், வேதனையையும் தெரிவித்துக்கொள்கின்றது. இந்தப் போரினால் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருவதைக் கண்டு, தமிழக சட்டமன்றப் பேரவை பெரிதும் வருந்துகிறது. எந்தவித அடிப்படைக் காரணமும் இல்லாமல், உலக நாடுகளின் கருத்துகளையும் மதிக்காமல், அமெரிக்கா தன்னிச்சையாக ஈராக் நாட்டின் மீது போரைத் திணித்து இருப்பதற்கும், அதற்கு இங்கிலாந்து போன்ற சில நாடுகள் துணை போயிருப்பதற்கும், தமிழக மக்களின் சார்பாக, தமிழக சட்டமன்றப் பேரவை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஈராக் மீது தொடுக்கப்பட்டுள்ள முறையற்ற போரை உடனடியாக நிறுத்தி, உலக நாடுகளிடையே அமைதியும், நீதியும் நிலைநாட்டப்படும் வகையில், அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகள்மீது உலக நாடுகளின் நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசின் வாயிலாக மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது. மேலும், இதுகுறித்து ஒருமித்த கருத்துடைய நாடுகளின் ஆதரவைப் பெற்று, ஐக்கிய நாடுகள் சபை வாயிலாக, அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகள் மேற்கொண்டுள்ள இந்த நீதிக்குப் புறம்பான போரை உடனடியாக நிறுத்துவதற்கும், அவை ஈராக் நாட்டிலிருந்து தமது படைகளையும், ஆயுதங்களையும் உடனடியாகத் திரும்பப் பெறுவதற்கும், உரிய அவசர நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும், இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றது."

(இ) காஷ்மீர் அப்பாவி மக்களைப் படுகொலை செய்த பயங்கரவாத செயலுக்குக் கண்டனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காஷ்மீரத்தில் அப்பாவி மக்களைப் படுகொலை செய்துள்ள பயங்கரவாதத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்:

2003 மார்ச் 26] [பேரவைத் தலைவர்]

“24-3-2003 அன்று காஷ்மீர் மாநிலத்தில் உள்ள புல்வாமா மாவட்டத்தைச் சேர்ந்த நாடிமார்க் என்ற கிராமத்தில், தீவிரவாதிகளால் அப்பாவி இந்து மக்கள் 24 பேர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து, தமிழக சட்டமன்றப் பேரவை தனது அதிர்ச்சியையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

காஷ்மீரில் தீவிரவாதிகளால் அப்பாவி மக்கள், 11 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட மொத்தம் 24 பேர் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தீவிரவாதமும், பயங்கரவாதமும் எந்த அளவிற்கு மனிதாபிமானமற்ற முறையில் செயல்பட முடியும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நெஞ்சைப் பிளக்கும் இந்தக் கொடூரச் செயல் மிகவும் வேதனை அளிக்கிறது.

இப்படிப்பட்ட நிகழ்வுகள், நாம் நாகரிக காலத்தில் வாழ்கிறோமா, இல்லை இன்னும் பழைய கற்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகத்தைத்தான் நம் அனைவரின் மனங்களிலும் ஏற்படுத்துகின்றன. எந்தப் பிரச்சினைக்கும் பேச்சு வார்த்தை மூலம் ஜனநாயக வழியில் தீர்வு காண முடியும். ஆனால் தீவிரவாதம் ஜனநாயகத்தையோ, பேச்சுவார்த்தையையோ சற்றும் மதிப்பதில்லை. அது பயங்கரவாதத்தையே முற்றிலும் நம்பியிருக்கிறது. மனிதாபிமான உணர்வு உள்ள எவரும் காஷ்மீரில் நடந்துள்ள இந்தக் கோரச் செயலைக் கண்டிக்காமல் இருக்க இயலாது.

அப்பாவி மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட இந்தக் கொடூரமான படுகொலையைத் தமிழக மக்கள் சார்பாகத் தமிழக சட்டமன்றப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. பயங்கரவாதத்தால் உயிர் இழந்த அப்பாவி மக்களின் குடும்பத்தாருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், இத்தகைய தீவிரவாத நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உரிய அவசர நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழக சட்டமன்றப் பேரவை இந்தத் தீர்மானத்தின் வாயிலாக மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது”.

முற்பகல் 11-05

இன்று காலை எனது அறையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இத்தீர்மானங்கள் ஏகமனதாக அவையில் நிறைவேற்றப்பட்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.